வாக்குமூலம்

உரிமையியல்மற்றும்குற்றவியல்நடுவர்நீதிமன்றம், மாதவரம்

வழக்குஎண். CC 128/2019

வழக்குசாட்சி LW9/PW4

| | | | |
|---|---|---|---|
| பெயர் | டாக்டர். முத்துநாராயணன், அரசு மருத்துவர் (ஓய்வு) | ஜாதி | |
| கணவர்/தந்தை | தர்மலிங்கம் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 63 |

தேதி 13.02.2026

எதிரி 1, 3 ஆஜர். எதிரி 2 ஆஜர் இல்லை. மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் அரசு ஸ்டேன்லி மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் பணியாற்றி கடந்த 31.07.2022 அன்று பணி ஓய்வுப் பெற்றுவிட்டேன். அதே பணியில் கடந்த 29.07.2011 அன்று அதிகாலை 12.10 மணியளவில் பணியில் இருந்த போது மல்லிகா வ/52 என்ற பெண்ணை அவருடைய மகள் ந்ந்தினி சிகிச்சைக்கான அழைத்து வந்தார். மேற்படி நபர் சுயநினைவுடன் காணப்பட்டார். அவரது கூற்றின் படி தன்னை அடையாளம் தெரியாத 6 நபர்கள் கைகளால் வீட்டு விலாசத்தில் வைத்து 27.07.2011 அன்று இரவு 08.15 மணியளவில் தாக்கியதாக்க் கூறினார். அவரைப் பரிசோதித்து பார்த்த போது சுயநினைவுடன் காணப்பட்டார். கழுத்து வலிக்கிறது என்றுக் கூறினார். 2 கால் முட்டிகளும் வலிக்கிறது என்று கூறினார். அவருக்கு வெளிக்காயங்கள் எதுவும் இல்லை. எனவே அவருக்கு முதலுதவிச் செய்து விபத்துப் பதிவேடு எண். 3450196 பதிவுச் செய்து மேல் சிகிச்சைக்காக வார்டு எண் 202 ல் உள்நோயாளியாக சேர்க்க பரிந்துரைச் செய்தேன். மேற்படி விபத்து பதிவேடானது அ.த.சா.ஆ.1 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது.

மேற்படி சம்பவத்திலேயே காயமடைந்ததாக்க் கூறி அன்றைய தினமே அதிகாலை 12.20 மணியளவில் நந்தினி வயது 19 என்பவரை அவரது அம்மா மாயா என்பவர் சிகிச்சைக்கு அழைத்து வந்தார். அவர் சுயநினைவுடன் காணப்பட்டார். அவரைப் பரிசோதனைச் செய்த போது இதற்கு முன் ஏற்ப்பட்ட காயத்துக்கான தையல் போடப்பட்டிருந்த இடத்தில் இருந்து இரத்தம் வருவதாகவும், தலை வலிப்பதாகவும், தலைச் சுற்றுவதாகவும் கூறினார். அவருக்கு வெளிக்காயங்கள் எதுவும் இல்லை. எனவே அவருக்கு முதலுதவிச் செய்து விபத்துப் பதிவேடு எண். 3450197 பதிவுச் செய்து மேல் சிகிச்சைக்காக வார்டு எண் 202 ல் உள்நோயாளியாக சேர்க்க பரிந்துரைச் செய்தேன். மேற்படி விபத்து பதிவேடானது அ.த.சா.ஆ.2 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது.

மேற்படி சம்பவத்திலேயே காயமடைந்ததாகக் கூறி அன்றைய தினமே அதிகாலை 12.25 மணியளவில் ராதா வயது 25 என்பவர் தானாக சிகிச்சைக்கு வந்தார். அவர் சுயநினைவுடன் காணப்பட்டார். அவரைப் பரிசோதனைச் செய்த போது அவருக்கு மார்பிலும், கழுத்திலும், உதட்டின் மேல் பகுதியிலும் வலி இருப்பதாகக் கூறினார். அவருக்கு வெளிக்காயங்கள் எதுவும் இல்லை. எனவே அவருக்கு முதலுதவிச் செய்து விபத்துப் பதிவேடு எண். 3450198 பதிவுச் செய்து மேல் சிகிச்சைக்காக வார்டு எண் 202 ல் உள்நோயாளியாக சேர்க்க பரிந்துரைச் செய்தேன். மேற்படி விபத்து பதிவேடானது அ.த.சா.ஆ.3 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணைச் செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

அடையாளம் தெரியாத 6 நபர்கள் தாக்கியதாகவே 3பேரும் கூறினார்கள் என்றால் ஆமாம். மூவரும் ஒன்றாக தான் வந்தார்கள் என்றால் ஆமாம். நான் பரிசோதித்த போது மூவருக்கும் வெளிப்படையான காயங்கள் எதுவும் இல்லை என்றால் ஆமாம். சிகிச்சைக்கு வந்த நபர்கள் சொன்ன விவரங்களை தான் விபத்துப் பதிவேட்டில் பதிந்துள்ளேன் என்றால் ஆமாம். நந்தினி தனக்கு முன்னர் ஏற்ப்பட்டதாக கூறிய காயத்தினை பார்த்தேனா என்றால் அவ்வாறு காயம் இல்லை. நுண்கதிர், ஸ்கேன் படம் பார்த்தால் தான் தலைசுற்றல் , தலைவலி தெரியும் என்றால் ஆமாம். மூவருக்கும் காயங்கள் ஏதும் இல்லை

என்றாலும் அவர்களாகவே காயங்கள் இருப்பதாக கூறினார்கள் என்றால் எனக்குத் தெரியாது.

**மறுவிசாரணை இல்லை.**